சுற்றறிக்கை

அன்புள்ள ப்ரஞ்சைஸீக்களே!

உங்களுக்கு வணக்கம்!!!

வாடிக்கையாளர்களுடன் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பல பிரஞ்சைஸீக்கள் சட்ட விரோதமான மற்றும் நெறிமுறைகளுக்கு முரணான விதத்தில் ஈடுபடுவதாக ஐஆர்சிடிசியின் கவனத்துக்கு தெரிய வந்துள்ளது. ஐஆர்சிடிசியால் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள சில பொதுவான சட்ட விரோத மற்றும் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு:

1. ஐஆர்சிடிசி-ஆல் விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தை விட வாடிக்கையாளர்களுக்கு மிகுதியாக கட்டணம் விதித்தல்.

2. அசல் கட்டணத்தை விட அதிக கட்டணம் என காட்டும் விதத்தில் டிக்கெட்டின் மதிப்பை மாற்றுதல்/திருத்துதல்

3. ஐஆர்சிடிசியின் www.irctc.co.in (B2C) இணையதளத்தில் ஒரு பயணி ஆக டம்மி யூஸர் ப்ரொஃபைல் (பர்சனல் லாகின் ஐடிகள்) உருவாக்கி அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு தத்கால் ரயில்வே ஈ-டிக்கெட்கள் புக் செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டிய ஐஆர்சிடிசி இணையதளத்தை சொந்தமாக பயன்படுத்தி வணிகரீதியான பயன்பாட்டுக்கு உள்ளாக்குதல்.

4. ஏராளமான லாகின் ஐடிகளை உருவாக்கி மற்றும் பயன்படுத்தி ஏஜெண்ட்கள் பயன்படுத்த தடைசெய்யப் பட்ட நேரமான காலை 8.00 மணி முதல் காலை 9.00 மணி வரை தத்கால் ரயில்வே ஈ-டிக்கெட்கள் புக் செய்தல்.

5. ஐஆர்சிடிசி இணையதளம் மற்றும் இணையதள சேவைகள் மூலம் தானே புக்கிங்குகள் செய்ய சட்டவிரோதமான மென்பொருள் பயன்படுத்துதல்.

6. டிக்கெட் ரத்து செய்த பின் ரீஃபண்ட் அளிக்காமல் இருத்தல்./ ரீஃபண்ட் அளிப்பதை தாமதப்படுத்துதல்.

7. கோரும்/ரத்து செய்யும் ஸ்லிப்களை நிரப்பாமல் இருத்தல்

8. போலி டிடிஆர் தீர்வுகோரிக்கைகளை நிரப்புதல்

9. ஐஆர்சிடிசி-ஆல் அவ்வப்போது விதிக்கப்படும் செய்ய வேண்டியவை மற்றும் செய்ய கூடாதவை மற்றும் இதர விதிகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றாமல் இருத்தல்.

மேலே சொல்லபட்ட தவறான நடைமுறைகள் யாவும் சட்டத்தை மீறுதல் என்பது தெளிவு மற்றும் நீங்கள் குற்றம் செய்துள்ளீர்கள் என அறியபட்டால் கீழ்க்கண்ட அபராத நடவடிக்கைகள் உங்கள் மீது மேற்கொள்ளப்பட காரணம் ஆகலாம் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்:

1. சப்-ஏஜெண்ட் ஐடி-ஐ நிரந்தரமாக செயலிழக்க வைத்தல் மற்றும்

2. உரிய கட்டணத்துக்கு மேல் விதிக்கப்பட்டு இருந்தால், அதிகமாக விதிக்கப்பட்ட கட்டணம் போல் உங்களிடமிருந்து இருமடங்கு தொகை வசூலிக்கப்படும் மற்றும்

3. ஒவ்வொரு கேஸ்-க்கும் ரூ.20000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அபராதமாக விதிக்கப்படும் மற்றும்

4. உங்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட காவல்நிலையங்களில் முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) தாக்கல் செய்ய அல்லது உரிய நீதிமன்றங்களில் உங்களுக்கு எதிராக குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வைத்தல். இதனால் உங்களுக்கு சிறைத் தண்டனை/அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.

மேற்கண்ட தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அறியப்படும் ஐசிடபிள்யூக்களுக்கு மேற்குறிப்பிட்ட ஏதேனும் அல்லது அனைத்து அபராதங்களும் விதிக்கப்படும்.

எனவே இத்தகைய அனைத்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தவிர்க்கும்படி மற்றும் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து உங்கள் ஐடிக்களை செயலிழக்க வைக்கும் கடினமான சூழ்நிலைக்கு எங்களை உள்ளாக்காமல் தவிர்க்க எங்களுக்கு உதவும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இன்டர்ஆக்டிவ் ஃபைனான்சியல் & டிரேடிங் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக,

26/04/2011.